செய்தி வெளியீடு எண்: 840 நாள்: 29.9.2010

<u>அரசு புதிய சலுகை</u>

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளவர்கள் தங்களது பதிவுகளை மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பித்தல் மாதத்திலோ அல்லது அதனைத் தொடர்ந்து வரும் இரண்டு மாதங்களிலோ தங்களது பதிவுகளை புதுப்பித்துக் கொள்ளலாம். அவ்வாறு பதிவினை புதுப்பிக்கத் தவறிய பதிவுதாரர்களுக்கு புதுப்பித்தல் மாதத்திலிருந்து 18 மாதங்கள் வரை கால அவகாசம் ஒரே ஒருமுறை மட்டும் சலுகையாக வழங்கப்பட்டு வந்தது. தற்போது அரசால் கணினி வழி ஒருங்கிணைப்புத் திட்டம் அமுலாக்கப்பட்ட நிலையில் ஆன்லைனில் புதுப்பித்தல் மேற்கொள்ள ஏதுவாக ஒரே சீரான நடைமுறை கடைபிடிக்கும் வகையில் 18 மாத புதுப்பித்தல் சலுகையினை மறுமுறை கோரினாலும் அனுமதிக்கலாம் என அரசாணை எண். 168, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ட்டி.2) துறை, நாள்:1.9.2010–ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி வேலைவாய்ப்பு அலுவலக பதிவுதாரர்களுக்கு வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே வழங்கப்பட்டு வந்த இந்த 18 மாத புதுப்பித்தல் சலுகை தளர்த்தப்பட்டு அடுத்த புதுப்பித்தல் தேதிகளிலும் பயன்படுத்திக் கொள்ளலாம். அவ்வாறு விடுபட்ட பதிவினை 18 மாத சலுகையின்படி புதுப்பிக்கையில் பழைய பதிவு மூப்பு கணக்கில் கொள்ளப்படும் என வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் திரு. ஆ.சு. ஜீவரத்தினம், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

21/09/10

**ஆ.சு. ஜீவரத்தினம், இ.ஆ.ப.,**
ஆணையர்.
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை,
கிண்டி, சென்னை.32.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

2/17